## *தென்காசி நகராட்சி*

## 06.01.2020 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் மன்றப்பொருள்

### மன்றப்பொருள் 729–06/01/2020

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் அதிகார வரம்பிற்கு கீழ் கட்டப்படும் தொழிற்சாலை கட்டிடங்கள் மற்றும் மூன்று குடியிருப்பு பகுதிகள் உள்ளடக்கிய கட்டிடங்கள் தவிர அனைத்து வகையான கட்டுமான தொடர் சான்றிதழ் மற்றும் முழுமையான சான்று வழங்குவதற்கு அறிமுகப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ள வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நப4 (3) ) துறை அரசாணை எண்.53, நாள்:16.04.2018 நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- பதிவு செய்யலாம்.

### மன்றப்பொருள் 730–06/01/2020

நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் அதிகார வரம்பிற்கு கீழ் கட்டப்படும் தொழிசாலை கட்டிடங்கள் மற்றும் மூன்று குடியிருப்பு பகுதிகளை உள்ளடக்கிய கட்டிடங்கள் தவிர அனைத்து வகையான கட்டிடங்களுக்கு கட்டுமானத் தொடர் சான்றிதழ் மற்றும் முழுமையான சான்று வழங்குவதற்கு திருத்திய பரிசீலனை கட்டணம் குறித்து வெளியிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(நநி–I) துறை அரசாணை எண்.18, நாள்.04.02.2019 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- பதிவு செய்யலாம்.

### மன்றப்பொருள் 731–06/01/2020

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டடவிதிகள் வடிவமைத்தல் 2019 அறிவிப்பு வெளியிடுதல் குறித்து வரப்பெற்றுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி–I) துறை அரசாணை எண்.18, நாள்.04.02.2019 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- பதிவு செய்யலாம்.

**<u>மன்றப்பொருள் 732–06/01/2020</u>**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிடவிதிகள் 2019–ன்படி நகராட்சிப் பகுதிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக விதி எண்.30(2)–ல் குறிப்பிட்டுள்ளபடி நகராட்சிப் பகுதிகளில் உள்ள பொருளாதார நலிவடைந்தோர் பகுதியினை (Economically Weaker section areas) நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று பிரசுரம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. **இந்**நகராட்சிப் பகுதியில் உள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள விரிவு அபிவிருத்தி திட்டங்களில் திட்டம் எண்.1 மற்றும் 2–ல் ஏழைகள் வசிக்கும் பகுதி**களாக**, **குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் மற்றும்** குடிசைமாற்று வாரியத்தால் அறிவிக்கப்பட்ட குடிசை பகுதியான 1 முதல் 7 வரையிலான பகுதிக**ள் அமைந்துள்ள கீழ்க்காணும்** நகரளவை எண்கள்

வார்டு B :– பிளாக் 12, நகரளவை எண்கள் 1 முதல் 109 வரை

பிளாக் 13, நகரளவை எண்கள் 21 முதல் 40 வரை

பொருளாதாரத்தில் நலிவடைந்த பகுதியாக அறிவிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள் 733–06/01/2020</u>**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் விளம்பரப் பலகைகளுககான உரிமம் கட்டணங்கள் விதித்தல் மற்றும் வசூலித்தல் மற்றும் குறித்தான விதிகள் 2003 ல் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் குறித்து அறிவிப்பு மற்றும் ஒழுங்குமுறைகள் செயலக துறையினரால் 31.01.2019 ந் தேதிய அரசிதழ் எண் 39ல் வெளியிடப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.

<u>மன்றப்பொருள் 734–06/01/2020</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நநி1) துறை அரசாணை எண்.18, நாள்.04.02.2019–ல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன்படி பொதுஒழுங்கு விதிகள் அறிவிப்பு உத்திரவு மற்றும் வரன்முறைப்படுத்துதல் குறித்து செயலகத் துறையினர்களால் வழங்கப்படும் அறிவிப்பு தமிழ்நாடு அரசின் 04.02.2019–ல் வெளியான அரசிதழ் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:- பதிவு செய்யலாம்.

<u>மன்றப்பொருள் 735–06/01/2020</u>

அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைபடுத்துதல் சம்பந்தமான விதிகள் 2017 ல் பிரிவு 113–ன்கீழ் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன்படி பிரிவு–122ன்படி திருத்தியமைக்கப்பட்ட விதிகள் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நகர்ப்புறம் மற்றும் வீட்டுவசதி {(ரு.அ.4(3)} தூறை அரசாணை எண்.21, நாள்.05.02.2019 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:- பதிவு செய்யலாம்.

**<u>மன்றப்பொருள் 736–06/01/2020</u>**

தென்காசி வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண். ஆ6/2389/19 நாள்.11.11.2019ல் புல எண்.211/2ல் குடியிருந்து வரும் மனுதாரருக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் பொருட்டு மேற்படி மனுதாரர்களுக்கு பட்டா வழங்குவதில் எந்தவொரு தடையும் இல்லை என தடையின்மை சான்று அளிக்குமாறு கேட்டுக்கொண்டபடி வார்டு சி, பிளாக் 2 நகரளவை எண்.211/2ல் ஒரு பகுதியில் திரு. கணபதி என்பவர் 0.00.32 சதுரமீட்டர் அளவிலும் திரு. இசக்கி என்பவர் 0.00.46 சதுரமீட்டர் அளவிலும் சர்க்கார் புறம்போக்கு நத்தத்தில் மேற்கண்ட புல எண்ணில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி குடியிருந்து வருவதாக நகரசார் ஆய்வாளர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். மேற்கண்ட அறிக்கையின்படி சர்க்கார் புறம்போக்கு நத்தமானது நகராட்சி எல்கைக்கு மேற்பகுதி உள்ளாதால் மேற்படி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பினை வரன்முறை செய்து வட்டாட்சியர் அலுவலகம் மூலம் பட்டா வழங்குவது குறித்து நகராட்சி மூலம் தடையின்மை சான்று வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.2935/19/எப்1)**

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்.737–06/01/2020</u>**

தென்காசி வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண். ஆ6/3451/19 நாள்.10.12.2019 புல எண்.13/34 டி.எஸ.எண்.96க்கு மேற்படி ஆக்கிரமிப்பினை வரன் முறைப்படுத்தி பட்டா வழங்கம் ஆணைப்படியும், வீடு இல்லாதவர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு நகராட்சி தீர்மானம் வழங்க கேட்டுக்கொண்டபடி , இந்நகராட்சி எல்கைக்குட்பபட்ட வார்டு பி. பிளாக் 4 நகரளவை எண்.96ல் கதவு எண்.570 வடக்கு மவுண்ட்ரோடு என்ற முகவரியில் திருமதி சபியாள்பீவி க/பெ ராஜாமுகம்மது என்பவர் 0.00.20சமீ அளவில் தெரு புறம்போக்கில் மேற்கண்ட புல எண்ணில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி குடியிருந்து வருவதாக நகர சார் ஆய்வாளர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேற்கண்ட அறிக்கையின் படி தெரு புறம்போக்கானது நகராட்சிக்கு பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட தெருவாகும். ஆகவே மேற்படி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பினை வரன்முறை செய்து வட்டாட்சியர் அலுவலகம் மூலம் பட்டா வழங்குவது குறித்து நகராட்சி மூலம் தடையின்மை சான்று வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2935/2019/எப்1 அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் 738–06/01/2020

தென்காசி நகராட்சி முதல் நிலை நகராட்சி ஆகும்.இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் பணியிடங்கள் 132 தற்போது 132 பணியிடங்களில் 61 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். 71 பணியிடங்கள் காலிப்பணியிடங்களாக உள்ளது.இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 70530 ஆகும்.மொத்த வார்டுகள் 33, நகராட்சியின் பரப்பளவு 26.15 சதுர கிமீ.தெருக்களின் எண்ணிக்கை 192 .மொத்த வீடுகளின் எண்ணிக்கை 22468 ,மொத்த வணிக நிறுவனங்கள் 3715 .தினமும் சராசரியாக 23.5 டன் குப்பைகள் அகற்றப்பட்டு வரப்படுகிறது.

தற்போது தென்காசி தனி மாவட்டமாக பிரிக்கப்பட்டுள்ளதால் அரசு அலுவலகங்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அடிக்கடி வந்து போகும் இடம் என்பதாலும், பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும்,தென்காசிக்கு அருகில் சுற்றுலாதலங்கள் உள்ளதால் தென்காசி வந்து செல்லும் மக்கள் அதிகளவு உள்ளதாலும்,மக்கள் தினமும் உருவாக்கும் குப்பை அளவுகளுக்கு ஏற்பவும்,நகர்ப்பகுதி விரிவடைந்து வருவதாலும் ,குடியிருப்புகள் அதிகரித்து வருவதாலும் தற்போது பணியில் உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்களைக்கொண்டு நகரின் அனைத்துப்பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 இன் கீழ் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளினை மேற்கொள்வது சிரமம் ஏற்பட்டதால்

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது உத்தரவு ந.க.எண் 36909-10/P3/2015 நாள் 18.12.2015 ல் 116 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த பணியாளர்கள் தனியார் மூலம் 3 ஆண்டுகளுக்கு பணியமர்த்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டு அதன் படி 21.12.2016 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 01.02.2017 முதல் மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு மேற்படி ஒப்பந்த காலம் 31.01.2020 அன்று முடிவடைகிறது.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது உத்தரவு ந.க.எண் K.DIS.NO 28369/J3/2018 நாள் 04.12.2018 இன் படி 125 துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி பணிமேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.ஆனால் மேற்படி அனுமதி உத்தரவின் படி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை.

இந்நகராட்சிக்கு அரசாணை எண் 101 இன் படி மொத்தம் 363 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தேவைப்படுகிறது.இதில் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் 61 பேர் போக மீதம் 302 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தேவைப்படுகிறது. எனவே நகராட்சிப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் பணி அமர்த்திக்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் **நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் முதன்மை அனுமதி பெற**வும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. **1)** திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணிகளை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்பைடயில் 302 துப்புரவு பணியாளர்களை கொண்டு **மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில்** பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

2)சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும்

மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 739–06/01/2020**

தென்காசி நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளில் உள்ள கழிவுகளை தரம் பிரித்து எடுப்பதற்கு 10வது மாநில உயர்மட்ட நிதிக்குழு நடவடிக்கையின்படி தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான மத்தளம்பாறை ரோடு உரக்கிடங்கில் மறு சுழற்சி மையம் (Resource Recovery Centre) அமைக்கும் பணி மேற்கொள்ள ரூ18.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ஆணை எண் 28819-18/P3/2019 நாள் 02.12.2019 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிக்கு, திருநெல்வேலி, மண்டல செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண் 4390/2019/ஆ1 நாள் 09.12.2019 அன்று தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 31.12.2019ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி நகராட்சிக்கு சொந்தமான மத்தளம்பாறை ரோடு உரக்கிடங்கில் மறு சுழற்சி மையம் (Resource Recovery Centre) அமைத்தல் | 18.00 | திரு K.இராஜாமுகம்மது ஒப்பந்தக்காரர் | 0.18% குறைவு |
| | | | திரு K.நிஸார் ஒப்பந்தக்காரர் | 0.89% கூடுதல் |

அ.கு மேற்படி பணிக்கு மதிப்பீட்டினை விட 0.18% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருK.இராஜாமுகம்மது ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(2819/2019/இ1)

<u>மன்றப்பொருள் 740–06/01/2020</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் உள்ள உயர்கோபுர விளக்கு 6 எண்ணம் மழையின் காரணமாக உயர்மின் அழுத்தம் ஏற்பட்டு மேற்படி மின்விளக்குகள் பழுதடைந்துள்ளது. அதனை சரிசெய்ய Soak (Ballast) 6 எண்ணம், Bulb 6 எண்ணம், Ignator 6 எண்ணம் மற்றும் Holder 6 எண்ணம் ஆகியவைகளை புதிதாக பொருத்தி உயர்கோபுர மின்விளக்கினை ஒளிரச் செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ38,500/-க்கும் மேற்படி புதிய பேரூந்து நிலையத்திற்கு வந்துசெல்லும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி 06.12.2019ம் தேதியன்று கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விபரம் | தொகை (எண்ணம் 1க்கு) |
|---|---|---|---|
| 1 | முத்து இன்டஸ்ட்ரீஸ் 2/2 பாரதியார் தெரு, மதுரை | Soak (Ballast) | 4350+GST |
| | | Bulb | 1400+GST |
| | | ignator | 370+GST |
| | | Holder | 290+GST |
| 2 | ஆகாஷ் இன்சினியரிங் அசோசியேட்ஸ் 16 வடக்கு சுவர் தெரு, கொண்டிதோப்பு, சென்னை | Soak (Ballast) | 4400+GST |
| | | Bulb | 1450+GST |
| | | ignator | 375+GST |
| | | Holder | 300+GSt |

அ.கு

1 மேமற்படி செலவு தொகை ரூ38500/-யை மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட மதுரை முத்து இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

3 மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

4 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றப்பொருள் 741–06/01/2020</u>**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளை சீரமைப்பதற்கு 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை மான்ய திட்டம் 2019-20ன் கீழ் கீழ்கண்ட தார் சாலை பணியினை மேற்கொள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று நிதி ஒதுக்கீடு செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்: 1 அண்ணா நகர் மற்றும் காளிதாஸ் நகர் ஆகிய பகுதிகளில் தார்தளம் அமைத்தல் | 49.50 |

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெறவும், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி போக மீதித் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(60/2020/இ1)

**<u>மன்றப்பொருள் 742–06/01/2020</u>**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளை சீரமைப்பதற்கு 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை மான்ய திட்டம் 2019-20ன் கீழ் கீழ்கண்ட தார் சாலை பணியினை மேற்கொள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று நிதி ஒதுக்கீடு செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்: 1 சக்தி நகரில் தார்தளம் அமைத்தல் | 49.50 |

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெறவும், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி போக மீதித் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(60/2020/இ1)

**மன்றப்பொருள் 743–06/01/2020**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளை சீரமைப்பதற்கு 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை மான்ய திட்டம் 2019-20ன் கீழ் கீழ்கண்ட தார் சாலை பணியினை மேற்கொள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று நிதி ஒதுக்கீடு செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்: 4 சப்ஜெயில் ரோடு, வார்டு எண்: 14 கன்னிமாரம்மன் கோவில் தெரு, வார்டு எண்: 15 வடக்கு ஒப்பனை பிள்ளையார் கோவில் தெரு மற்றும் வார்டு எண்: 22 தெற்கு ஒப்பனை பிள்ளையார் கோவில் தெரு ஆகிய இடங்களில் தார்தளம் அமைத்தல் | 49.10 |

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெறவும், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி போக மீதித் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(60/2020/இ1)

**மன்றப்பொருள் 744–06/01/2020**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகளை சீரமைப்பதற்கு 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை மான்ய திட்டம் 2019-20ன் கீழ் கீழ்கண்ட தார் சாலை பணியினை மேற்கொள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று நிதி ஒதுக்கீடு செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்: 26 கீழப்பாளையம் (பாவடி) மற்றும் மாதாங்கோவில் 1ம் தெரு ஆகிய இங்களில் தார்தளம் அமைத்தல் | 49.50 |

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெறவும், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி போக மீதித் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(60/2020/இ1)

**மன்றப்பொருள் 745–06/01/2020**

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்கண்ட சாலைகளை சீரமைப்பதற்கு 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை மான்ய திட்டம் 2019-20ன் கீழ், உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 5 மேலவாலிபன் பொத்தையில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 9.90 |
| 2 | வார்டு எண் 20 சிந்தாமணியில் சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல் | 9.80 |
| 3 | வார்டு எண் 31 உச்சி மாகாளி அம்மன் கோவில் 1ம் தெருவில் சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல் | 9.80 |
| 4 | வார்டு எண் 21 அம்மன் சன்னதி 2ம் தெருவில் (ஊத்துக்குளி முடுக்கு) சிமெண்ட் தளக்கற்கள் பதித்தல் | 9.90 |

மேற்படி மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி பணிகளை 14வது மத்திய நிதிக்குழு பரிந்துரை மான்ய திட்டம் 2019-20ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(60/2020/இ1)

**மன்றப்பொருள் 746–06/01/2020**

தென்காசி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-19ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு தென்காசி, உதவி பொறியாளர், நகர்ப்புறம் I மின்விநியோகப் பகுதிக்கு உட்பட்ட இடங்களில் 18 எண்ணம் LED தெருவிளக்குகளும், மற்றும் இளநிலை மின் பொறியாளர், விநியோகம்/வடக்கு மின்விநியோகப் பகுதிக்கு உட்பட்ட இடங்களில் 7 எண்ணம் LED தெருவிளக்குகளும் அமைப்பதற்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது. தற்போது மேற்படி தெருவிளக்குகள் அமைக்க மதிப்பீட்டு கட்டணம் முறையே ரூ1,52,190/- மற்றும் ரூ62,096/- ஆக மொத்தம் ரூ2,14,286/-யை செலுத்த தென்காசி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மூலம் கேட்பு வரப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

3 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(1802/2019/இ1)

தென்காசி

நகராட்சி

06.01.2020 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்

| வ.எண். | மன்றப்பொருள் எண். | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | | | |
| 1 | 1 | 729 | அ.கு. அனுமதிக்கப்பட்டது./பதிவு செய்யப்பட்டது |
| 2 | 2 | 730 | அ.கு. பதிவு செய்யப்பட்டது |
| 3 | 3 | 731 | அ.கு. பதிவு செய்யப்பட்டது |
| 4 | 4 | 732 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 733 | அ.கு. பதிவு செய்யப்பட்டது |
| 6 | 6 | 734 | அ.கு. பதிவு செய்யப்பட்டது |
| 7 | 7 | 735 | அ.கு. பதிவு செய்யப்பட்டது |
| 8 | 8 | 736 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 737 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 738 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 739 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 740 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 741 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 742 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 15 | 15 | 743 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 16 | 744 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 17 | 17 | 745 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 18 | 18 | 746 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| | | | |

(ஒம்) க.செ. ஹசீனா

தனி அதிகாரி

தென்காசி நகர்மன்றம்